# தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மலர் தூவி மரியாதை!



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 100–வது பிறந்த நாளையொட்டி நேற்று முன்தினம் (3.6.2023), முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் அமைச்சர் பெருமக்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 100–வது பிறந்த நாளையொட்டி நேற்று முன்தினம் (3.6.2023), முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச்சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். அதைத் தொடர்ந்து, ஒடிசா இரயில் விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் முதலமைச்சர் அவர்கள் தலைமையில் ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.இந்நிகழ்வில் அமைச்சர் பெருமக்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 100–வது பிறந்த நாளையொட்டி நேற்று முன்தினம் (3.6.2023), முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, அண்ணா அறிவாலயத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச்சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் அமைச்சர் பெருமக்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 100–வது பிறந்த நாளையொட்டி நேற்று முன்தினம் (3.6.2023), முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, முரசொலி வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச்சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் அமைச்சர் பெருமக்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 100–வது பிறந்த நாளையொட்டி நேற்று முன்தினம் (3.6.2023), முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் அமைச்சர் பெருமக்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 100–வது பிறந்த நாளையொட்டி நேற்று முன்தினம் (3.6.2023), முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, கோபாலபுரம் இல்லத்திற்குச் சென்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 100ஆவது பிறந்த நாளையொட்டி நேற்று முன்தினம் (3.6.2023), முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, சி.ஐ.டி. நகர் இல்லத்திற்குச் சென்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் துணைவியார் திருமதி ராஜாத்தி அம்மாள், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 100–வது பிறந்தநாளையொட்டி, நேற்று முன்தினம் காலை, சென்னை–மெரினா கடற்கரையில் அமைந்துள்ள கலைஞர் அவர்களின் நினைவிடத்தில், கலைஞரின் செயலாளர் கே.இராஜமாணிக்கம் ஐ.ஏ.எஸ். (ஓய்வு) அவர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முன்னாள் பாதுகாப்பு அதிகாரி பாண்டியன், இடைக்கழிநாடு சதீஷ், பாண்டியனின் புதல்வர் சக்தி குமரன் ஆகியோர் உடன் உள்ளார்கள்.